# SREEVATSA REALTY PULSE

www.sreevatsa.com

SREEVATSA REAL ESTATES PVT. LTD. | ISSUE 02

## கனவே கனவே களமிறங்கு

### – கலைமாமணி மரபின் மைந்தன் முத்தையா

**சொந்தமாய் ஓர் இல்லம். இந்தக் கனவு வந்து போகாத இதயங்களே இல்லை எனலாம். நினைத்த மாத்திரத்தில் நிகழ்த்தி காட்டக் கூடியது அல்ல என்பதனால் இந்த கனவுக்கு கூடுதல் மதிப்பு உண்டு.**



மரபின் மைந்தன் முத்தையா

முன்னொரு காலத்தில் நடுத்தர வயது கடக்கும் நிலையில் வீடு கட்டத் தொடங்குவது வழக்கமாக இருந்தது. இப்போதெல்லாம் பொருளாதார விழிப்புணர்வு வருமான வாய்ப்புகள் ஆகியவற்றால் 30 வயதுகளில் இருப்பவர்கள் தங்களுக்கான இல்லத்தை உருவாக்கிக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள்.

இந்த மாற்றம் காலத்தின் கட்டாயம். முன்னரெல்லாம் எல்லா முயற்சிகளையும் இந்த தனி மனிதர்களே செய்ய வேண்டும்.

இப்போதெல்லாம் அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள் அந்தப் பணியில் உதவ முன்வருகின்றன.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் கடனுதவி வழங்குகின்றன.

இத்தகைய வசதி வாய்ப்புகளை எத்தனை பேர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதுதான் அடுத்த கேள்வி.

வீடு கட்டி முடிப்பது மிகவும் சிரமம் என்கிற பழைய நம்பிக்கைகளின் போர்வையை பல உள்ளங்கள் உதற மறுக்கின்றன. நிலம் பார்த்து இடம் பார்த்து தங்கள் கனவை நிறைவேற்றி தரக்கூடிய நிறுவனம் பார்த்து தங்கள் நிதி நிலையில் பார்த்து விரைந்து முடிவெடுப்பவர்கள் தங்கள் சம்பாத்தியத் திறன் சீராக இருக்கும் போதே ஒரு வீட்டின் உரிமையாளராகி விடுகிறார்கள்.

சரியான திட்டமிடல் இல்லாத போது தான் சுலபத்தவணை சிரமத்தவணை ஆகிறது. தன்னை நம்பாமல் தயக்கத்தை மட்டுமே நம்புகிறவர்கள் ஒரு கட்டத்துக்கு மேல் தங்கள் முன்னேற்ற கனவுகளில் முன்னேற முடியாமல் போகிறது. சரியான நேரத்தில் சரியான முடிவு எடுத்து எண்ணங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது வெற்றியாளர்களின் வாழ்க்கை முறை.

எச்சரிக்கை உணர்வு எப்போதும் அவசியம் தான். ஆனால் அந்த எச்சரிக்கை உணர்வே எல்லாவற்றுக்கும் தடையாக மாறிவிடக்கூடாது.

தீப்பெட்டியில் தீக்குச்சியை உரசும் போது நெருப்பு சுடும் என்கிற எச்சரிக்கை உணர்வு தேவையாகிறது. நெருப்பு சுடும் என்பதனால் தீப்பெட்டியை தொட மாட்டேன் என்று கூடுதல் எச்சரிக்கை உணர்வு கொள்பவர்கள் குளிர் காய முடியாது.

எனக்குத் தெரிந்த ஒருவர் அடிப்படை முதலீட்டுக்கு என்று கொஞ்சம் பணம் வைத்திருந்தார். வங்கியில் கடன் உதவி பெற்றால் மாதத் தவணை கட்டும் அளவு அவருக்கு வருமானம் வந்து கொண்டிருந்தது.

பல நிறுவனங்கள் கட்டித் தரும் வீடுகள் பற்றி அவருடைய நண்பர்கள் தங்கள் சொந்த அனுபவத்தின் வழியே சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இவரும் பல முன்னணி நிறுவனங்களின் முகவர்களோடு பேசினார். இடங்களைப் போய் பார்த்தார். இன்னும் சிக்கனமாக.... இன்னும் பக்கமாக.... இன்னும் குறைந்த வட்டியில்.... என ஏகப்பட்ட இன்னும் இன்னும் ங்கள் .. இதன் விளைவாக இவரை விட இளைஞர்கள் பலர் நடத்தும் புதுமனை புகு விழாக்களுக்கு மட்டும் இன்னும் போய்க்கொண்டே இருக்கிறார். இன்னும் விசாரித்துக் கொண்டே இருக்கிறார்.

**‘எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு’**
என்கிறார் திருவள்ளுவர்.



வீடு கட்டுவது மட்டுமல்ல. வாழ்வின் கட்டமைப்புகளில் கூட விரிவாக ஆராய்ந்து விரைவாக முடிவெடுப்பவர்களால் பல வெற்றிகளை கைக்கொள்ள முடிகிறது. எந்த ஒரு கனவாக இருந்தாலும் அதை நோக்கி களத்தில் ஓரடி வைத்தால் அது நூறடிகளாக வளரும். பின்னர் கண்ணுக்கு எதிராக அந்தக் கனவுகள் மலரும்.

எப்போதுமே நம் கனவுகளை நாம் மிகப்பெரியதாகவும் நம் திறமையை குறைவாகவும் எடை போடுவதால் தான் தயக்கங்கள் ஏற்படுகின்றன. வாழ்வின் அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டும் என்கிற உணர்வே உந்து சக்தி. அதை நோக்கி திட்டமிடுதலும் செயல்படுத்துதலும் வளர்ச்சியின் படிநிலைகள்.



சிவபெருமானுக்கு ஆலயம் எழுப்ப துணிந்து முடிவெடுத்தார் ராஜராஜ சோழன். திசைகள் வியக்கும் படி தஞ்சை பெருவுடையார் ஆலயம் உருவானது.

மறைந்த தன் மனைவிக்கு மாளிகை எழுப்ப உடனே முடிவெடுத்தார் ஷாஜகான். உலகம் புகழும் தாஜ்மஹால் வடிவம் கொண்டது.



நாம் கட்டப் போகிறவை பிரம்மாண்டமான கட்டுமானங்கள் அல்ல. பிரியமான உறவுகளுடன் வாழ நமக்கான இல்லங்கள். இதில் முடிவெடுக்க... தயக்கம் என்ன? சொல்லுங்கள்.

## When Villas are your Choice

**SREEVATSA KAILASH**

**Vellakinaru Pirivu**
**Coimbatore**

## An abode for the arrived!

When you know that you have 'arrived' and need to announce your arrival, nothing better than a home that will mirror your 'arrived confidence'. Sreevatsa Kailash is just what you need to make yourself feel the goodness of your achievement - premium villas that can be curated by you the way you envisage luxury in your living space.

### Your villa is what you can imagine it to be

At Sreevatsa Kailash, we want each home to be as individualistic as you are. And hence, we have opened up to customized finishes and functionalities of the inside of your home. While the exterior design and dimensions remain, we leave it to your wildest imagination to configure the inside of your villa to suit every wish you have for your dream home.

### Clubhouse Amenities

Contemporary lounge | AV / Indoor games room
Gym | Library | Roof-top party area | Gazebo
Chippo Golf | Leisure pavilion | Children's play area
Yoga zone | Billiards / Snooker | Table Tennis
Service toilet for staff





### Common Features to Building Complex

Hydro pneumatic pumping system | Rain water harvest | Intercom connectivity | 24 X 7 Security | Compound wall Common area lighting | Landscape | Paved driveway | Genset backup Private roads | CCTV





### Villa Features

WiFi enabled | Smart entry system | Video door phone | Private lawn with deck | Spacious car parking | Pressurized water supply
Insect guard with windows | Individual reticulated gas pipelines
Provision for electric car charging dock | Genset backup

### Space as you like it

Sreevatsa Kailash villas respect your need for personal space and freedom. Look for the nooks that you completely 'den' out and fashion-tap spaces that you want to show-off. With ample space for all your wants, needs and desires you just have to wish for what you want to do with your spaces, and behold! it will be done.



RERA No: TN/11/Building/0438/2021

The images shown are representative only. Furnishings and fixtures shown in the model apartment are indicative and not part of the apartment.

# Villas – the flavour of the season

Coming up soon are two villa projects in Chinnavedampatti & Thudiyalur to cater to the increased demand for Villas for home buyers in Coimbatore.




A premium villa project in Chinnavedampatti accents the need for personal spaces in and around your home.

New Uber-Luxury Villas at Thudiayalur by Sreevatsa looks forward to welcoming you soon.



# Memorable Moments?

Urbania

...WHILE YOU ARE HERE

- WEDDING
- CORPORATE EVENTS
- BIRTHDAY PARTIES
- KITTY PARTIES
- FAMILY GET-TOGETHER













Sreevatsa Urbania is a classy event venue located at Chinnavedampatti, abutting the Sreevatsa Urban Village community living complex. Urbania has a host of event spaces that cater to private functions and corporate events for about 200 people. Indoor party and conferencing facilities, expansive lawns, food pavilions set to celebrate in an aesthetic and appealing environment will enhance the experience of your guests.










**Urbania**
(Adjusant to Sreevatsa Global Village)
Athipalayam Road, Chinnavedampatti
Coimbatore - 641 049

**For Bookings & Enquiry**
**Contact: 94877 51853**

# From small to big we have one for you in every size

## SREEVATSA URBAN VILLAGE

**Athipalayam Road (Opp. KCT), Chinnavedampatti, Coimbatore**

Enjoy the benefit of right-sized apartment homes at Sreevatsa Urban Village. Our ready to occupy homes at Sreevatsa Urban Village are built to suit your exact need in an apartment home. Be it a single bedroom, two bedroom or 3-bedroom homes, we have it all.

So, go ahead and choose the luxury of space that suits you the best.



Buying the right apartment is only the first step to owning a home. From Vanilla to fully furnished, acclimatizing your apartment with interiors to suit your individual preferences is what it takes to make your apartment your home. At Sreevatsa we think ahead of you; identifying your every need in ensuring that your apartment gives you superior livability with everything that you want taken care of.

With the Sreevatsa stamp of quality a 'given' rest assured that only the best will go into the making your apartment-home. No less-certainly; maybe more-possibly.




**AMENITIES**

- Children Play Area
- Half Basket Ball Court
- Reflexology Walking Track
- Landscaped Garden
- Lifts
- Genset Backup for Flats & Common Area
- CCTV
- 24 X 7 Security
- Provision for RO Unit at Kitchen
- STP
- Reticulated Piped-gas Supply

**VISIT OUR MODEL APARTMENTS TO MAKE YOUR CHOICE**

RERA No. TN/11/Building/044/2022



**What you see is what you get – absolutely!**

Sreevatsa Urban Village comes as single, two and three BHK apartments that maximize comfort in minimum space. With all basic amenities forming part of the standard offer these apartments are an ideal fix for people who are looking for cozy, **easy to maintain homes**.









# வளமான வாழ்வளிக்கும் வாஸ்து சாஸ்திரம்!



பகவத் கைங்கர்ய, ஜோதிட ஸாகர சக்கரவர்த்தி
A.M.ராஜேகாபாலன்

மனிதப் பிறவி எடுத்தவர்கள் அனைவரும் ஆசைப்படுவது, சொந்த வீட்டில் வசிக்க வேண்டும் என்பதுதான் ! இந்த ஆசைக்கு எவரும் விதிவிலக்கல்ல !! வியாபாரம் செய்பவர்கள்கூட, என்றாவது ஒருநாள் சொந்தக் கடை வைக்க வேண்டும் என விருப்பப்படுவது இயல்புதானே? வாழ்நாளில் என்றாவது ஒருநாள் இவ்வாசை நிறைவேறும்போது, குடும்பம், குழந்தைகளுடன் மகிழ்ச்சியுடனும், மன நிறைவுடனும் சொந்த வீட்டில் வாழும் வாழ்க்கை, தெய்வம் தந்த வரம்தானே ! அத்தகைய விருப்பம் நிறைவேறுவதற்கென வானியல் கலையின் அடிப்படையில், சில விதி முறைகளை நமக்கு வழங்கி அருளியுள்ளனர் 'வாஸ்து சாஸ்திரம்' எனும் ஒப்புயர்வற்ற கலை மூலம் நம் முன்னோர்கள். வாஸ்து சாஸ்திரம், இயற்கை சூழ்நிலை (Natural environment) நமது சூரிய மண்டலத்தில் சதா வலம் வந்துகொண்டிருக்கும் நவக்கிரகங்கள், காற்று வீசும் திசைகள், சூரியன் வலம் வரும் நீள்வட்டப் பாதையிலிருந்து அவரவரது ஊர்கள் அமைந்துள்ள இடம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவையே இவ்விதி முறைகள்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் சீனா, ரோமாபுரி, எகிப்து, பாலஸ்தீனம், பாரசீகம், கிரீஸ், ஆகிய நாடுகளிலிருந்து பல மாணவ, மாணவியரும், நம் நாட்டு உலகப் புகழ்பெற்ற நாளந்தா மற்றும் தட்சசீலம், சர்வகலா சாலைகளில் வான சாஸ்திரம், வாஸ்து சாஸ்திரம், ஜோதிடம், மருத்துவம் ஆகியவற்றைப் படித்து வந்துள்ளதற்கு, சரித்திரம் சான்று பகர்கின்றது.

நமது முன்னோர்கள் எந்த அளவிற்கு வாஸ்து சாஸ்திரத்தில் நிபுணர்களாக இருந்து வந்துள்ளனர் என்பதைத் தற்காலத்தில் திகழும் மிகப் புராதனமான பல திருக்கோயில்களைப் பார்த்தால், தெரிந்துகொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட தினங்களில், குறிப்பிட்ட நேரத்தில் சூரியனின் கிரணங்கள் கருவறையிலுள்ள இறைவனின் திருவுருவத்தின் மீது விழுகிறது. இதில் ஆச்சர்யம் என்னவென்றால், பூமி சதா தன்னைச் சுற்றிக்கொண்டு, சூரிய பகவானையும் வலம் வந்துகொண்டிருக்கிறது. இவ்விதம், விநாடிக்கு விநாடி மாறிக்கொண்டே இருக்கும் நிலையில், எவ்விதம் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் (angle of inclination) கணித்துப் பார்த்து, இடத்தைத் தேர்வு செய்து, திருக்கோயில்களையும், நிர்மாணித்துள்ளனர் என்பதை நினைக்கும்போது, வியப்பாக உள்ளது! எண் திசைகளிலும், எட்டு தேவதைகள் (அதாவது, அஷ்ட திக் பாலர்கள் – கிழக்கு – இந்திரன், மேற்கு – வருணன், வடக்கு – குபேரன், தெற்கு – எமன், தென்கிழக்கு – அக்னி, வடமேற்கு – வாயு, வடகிழக்கு – ஈசானன், தென்மேற்கு – நிர்ருதி பாதுகாத்து வருவதாக நம் புராதன நூல்கள் விவரித்துள்ளன.

இப்படிப் பாதுகாத்து வரும் ஒவ்வொரு தேவதைக்கும் ஒவ்வொரு அதிகாரம் – சக்தி உண்டு. ஆகையால், அதை மனத்திற் கொண்டு, நாம், நம்முடைய வீடுகளை அமைக்க வேண்டும். உதாரணமாக, தெற்கு திசை நோக்கி கால்வைத்துப் படுக்கக் கூடாது என்பதையும், நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். ஏனெனில், மறைந்த நமது முன்னோர்கள் இவ்வுடலை நீத்த பிறகு, வசிக்கும் பித்ரு லோகம் தென் திசையில்தான் உள்ளது. மேலும், வடதுருவத்திலுள்ள காந்த சக்தியையும் பெரியோர்கள் கணிப்பில் எடுத்துக்கொண்டுள்ளனர் . மேலும் ஒரு உதாரணமாக, ஒரு வீடு நிர்மாணிக்கும்போது, சமையலறை அக்னி மூலை எனப்படும் தென்கிழக்கு பகுதியிலும், பணம், நகைகள் போன்ற விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதை குபேர மூலையிலும் (North) படுக்கையறை வடகிழக்கு திசையிலும் அமைந்திருப்பின், அக்குடும்பம் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும், அனைத்து விஷயங்களிலும் அபிவிருத்தியடைகின்றது எனக் கூறுகிறது, கட்டடக் கலை சம்பந்தப்பட்ட புராதன நூல்கள். அதே போன்று குளியலறை, கழிவறை எவ்விடத்தில் அமைந்திருந்தால் உடல் நலனைப் பாதுகாக்கும் என்பதை வாஸ்து சாஸ்திரம் வகுத்துக் கூறியுள்ளது. இவ்விதிகள் அனைத்தும் நமது நன்மைக்காகவே!
விஞ்ஞானபூர்வமாக, சூரியன் வலம் வரும் நீள்வட்டப் பாதையின் கோணநிலையின் அடிப்படையில் நமது முன்னோர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் கட்டடம் அமைந்திருந்தால், ஐஸ்வர்யம், ஆரோக்கியம், மன நிறைவு, மன நிம்மதி, மகிழ்ச்சி, நல்ல குழந்தைகள் ஆகியவற்றுடன் நம்மால் வாழ முடியும். அதற்காக ஏற்பட்டதே, இந்த வாஸ்து சாஸ்திரம். அதற்காகவே நமது வீட்டையோ, கடைகளையோ அல்லது திருக்கோயில்களை நிர்மாணியிக்கும்போது வாஸ்து சாஸ்திரத்தின் அடிப்படையில், நிர்மாணித்தால், பெறற்கரிய அனைத்து பேறுகளையும் பெற்று நல்வாழ்வு பெற முடியும். இத்தகைய வாஸ்து சாத்திரத்தில் நல்ல தேர்ச்சி பெற்ற வல்லுநர்களைக் கலந்தாலோசித்து, வீடுகளை அமைத்தால், சர்வ மங்கலங்களும் பெற்று, வாழ்க்கை வளமுடனும் உடல் நலனுடனும் மட்டற்ற மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை !

## SREEVATSA Buddy Benefits



At Sreevatsa, we spread the cheer for our buyers. Simply refer a friend to us and be gifted with rewards that will endear our association, should your buddy choose to invest in a Sreevatsa home. Our buddy benefits are sure to make you feel happy as it is a win-win-win situation for you, your buddy and us.

# The peace and calm of independent villas in an apartment

## SREEVATSA VISWA

Vilankurichi, Coimbatore

### Villa-styled Apartments

Embrace the luxury of privacy, yet enjoy safety and prudence of apartment living. Sreevatsa Viswa is designed for maximum privacy that an apartment can offer with hardly any common walls between apartments. The piano-design stair lobby, an entry foyer for each apartment before you enter the actual living space ensures that access to each apartment is absolutely private.

So, if you are nostalgic about a yesteryear home; are looking for an equally private life space and yet seek the advantage of cost in a shared living space; connect with us.









**Key Highlights**

- Independent Villa-styled Apartments
- Piano-design stair lobby for entry privacy
- Entry foyer for each apartment
- Free-space periphery walls between each apartment
- 3 independent lifts / stair lobbies for 3 blocks
- Over 40% lung space
- Expansive lawn in front of the apartment block
- Greenery – lined entry driveway

**AMENITIES:**

Multi- purpose activity room with Gym | Generator
Children play area | Landscape garden | STP
300 W standby power supply for each flat | Covered car parking
Common reticulated piped gas supply | CCTV

Sreevatsa Viswa
Location QR Code



RERA No.: TN/11/BUILDING/0166/2023

## வீடு என்பது எப்போது இல்லமாக உருமாறுகிறது?

விளக்குகிறார் பிரபல ஜோதிடர் **திரு. ஏ.எம். ராஜகோபாலன்** அவர்கள்

"எப்படி வேண்டுமானாலும் வாழலாம்" என்றிருந்த உலக மக்களுக்கு "இப்படித்தான்" வாழ வேண்டும் என்ற நெறிமுறையைக் காட்டிய வேதகால மகரிஷிகள் அவதரித்த புண்ணிய பூமி பாரதம். உலகில் வேறு எந்த வாழ்க்கை நெறிமுறையும் தோன்றுவதற்கு முன்பாகவே அவதரித்தது. அஹிம்சையிலும், அன்பிலும், பண்பிலும், சத்தியத்திலும் உயர்ந்த நமது வேத பண்பாடு.

அக்காலத்தில், தொட்டில் குழந்தை முதல், தாய்ப்பாலுடன் அறிவையும், ஒழுக்கத்தையும், நேர்மை, சத்தியம், தேசபக்தி ஆகியவற்றையும் புகட்டி வந்தனர். ஆதலால் நம் குழந்தைகள் அனைவரும் பால்மணம் மாறாத வயதிலிருந்தே தெய்வபக்தியிலும், ஒழுக்கத்திலும், சத்தியத்திலும் உயர்ந்து விளங்கி வந்தனர்.



குழந்தைகளின் மனமே நற்குணங்களின் செழிப்பான நிலம் (Child's mind is the fertile land to cultivate good traits) என்று கூறுவர் பெரியோர். ஆனால் தற்காலத்தில் குழந்தைகளின் மனம் கட்டுப்பாடில்லாமல் அலைபாயும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். செல்போன் என்னும் அரக்கன் உடல்நலனை மட்டுமின்றி மனநலனையும் பாதித்து வருவதை மனநல மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.

இன்றைய நம் குழந்தைகளே நாளைய நம் நாட்டின் தலைவர்கள்! குழந்தைகள் ஆரோக்கியத்துடன் வளர்ந்தால்தான் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க முடியும், நிர்வகிக்க முடியும்.

இதற்கு என்ன வழி? அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த நம் முன்னோர்கள் வாழ்ந்த வழிமுறைகளுக்கு நாம் திரும்ப வேண்டும். அதுவும் உடனடியாக!

குழந்தையின் கல்வி குடும்பத்தில்தான் ஆரம்பமாகிறது என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்தாகும்! ஆதலால், குழந்தைகளை நல்லபடி வளர்க்கும் பொறுப்பு தாய் தந்தையருடையதே! தினமும் அதிகாலையிலேயே குழந்தைகளை எழுப்பிவிட வேண்டும். பின்பு, பல்துலக்கி, முகம் கழுவிவிட்டு, வீட்டின் பூஜையறையில் இறைவனை வணங்கியபின், வீட்டில் உள்ள பெரியவர்கள் மற்றும் தாய் தந்தையரை வணங்கி, ஆசி பெறச் செய்ய வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பின்பும், உயர்ந்த பண்புகள் அவர்கள் மனதில் ஊன்றி நிற்கும்!!

உத்தமர்களினால் சமூகம் உயரும், சமூகமே நாட்டை உயர்த்துகிறது. தான் மட்டும்தான் வாழ வேண்டும் என எண்ணாது உலகமே ஒரு குடும்பமே என்ற உயர்ந்த தன்னலமற்ற கொள்கையே பாரதத்தின் உலகம் வியக்கும் உயர்விற்கு காரணமாகும்.

காலம்காலமாக நம் குழந்தைகளுக்கு குலதெய்வத்தின் பெயரை அல்லது அந்தந்த ஊரின் பிரதான கோயில் இறைவன், அம்பிகை, பெருமாள், தாயார் பெயர்களில் ஒன்றை வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தோம். எதிர்காலத்தில், முடிந்தபோதெல்லாம் அந்த குலதெய்வத்தைச் சென்று தரிசிக்க வேண்டும் என்ற ஆசையையும் அது ஏற்படுத்திவிடுகிறது. ஆகவே, மேலைநாட்டு நாகரீகத்தால் ஈர்க்கப்பட்டு புதுமையாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் நமது பண்பாட்டுக்கு அந்நியமான, பொருத்தமில்லாத பெயர்களை வைக்கும் பழக்கத்தைக் கைவிடவேண்டும்

வீடு என்பது வெறும் மனிதர்கள் மட்டும் குடியிருப்பதற்கு அல்ல. அதில் அன்பு, அமைதி, பொறுமை, பக்தி முதலான நற்குணங்களும் குடியிருக்க வேண்டும். அப்போதுதான் வீடு என்பது முழுமைபெற்று இல்லமாகப் பரிணமிக்கிறது. அப்படிப்பட்ட இல்லமானது சகல ஐஸ்வர்யங்களின் இருப்பிடமாக விளங்கும்.

# Real Estate – for a long reliable low-risk investment




Is this a right time to invest in real estate? This is a **'forever question'** in minds of both investors and home buyers. Much of this hesitation comes from the desire to time the market so that one buys at a time when the prices are perfect, interest rates for loans are low and the return-on-investment it delivers. Though the choices in buying differs between investors and home-buyers; being absolutely convinced that you are buying at the opportune moment, is always a challenge.

So, what are the factors to consider while investing in real estate? **Demand** obviously plays a key role as it is the demand for homes and commercial spaces that drives the confidence of people investing in real estate. A recent, post-covid phenomenon, in Tier 1 cities is the high demand for rental properties in IT zoned districts. With most IT companies now insisting that their employees return to offices from their 'work-at-home' comfort, these areas are seeing an urgent and increased demand for rental housing that has spiralled the rent to three times its covid rates and at least twice the pre-covid rentals. So much so, that most investors who own rental home properties are serving notice to their tenants to capitalize on the spiked rental rates prevailing.

This is also driving investments in real estate as investors are also seeing this as an opportunity to invest in a medium that is offering more than normal returns from rentals.

There is also a plus factor for promotors from this sudden and urgent requirement for housing space. Promotors who were sitting on huge blocks of unsold stock are seeing an opportunity to quickly liquidate stock that too at undiscounted prices. While they were struggling to sell during covid and post covid uncertainities due to resistance from home buyers and investors, the situation is now buoyed by demand taking the lead to stabilize realty sales in these towns.

On the flip side there is also a fear in investors and home buyers that this may be a bubble-like situation with increased interest rates and inflation looming as a threat on the horizon. But then, one is used to seeing real estate investment like a marathon and not a short distance sprint. So, buyers should train their investment decisions on what will happen to the real estate markets 10 years from now, as in; would you be able to command and sustain organic increase in rental at-the-least, and 30 years from now; when the current investment will be ready for a overhaul. However, real-estate has never failed to increase your net worth year-on-year and hence the only question that needs to be on one's mind is how much 'more' will your investment be worth in the future and what would be its liquidity value if and when you want to exit and put up your property for sale.

> **"A simple thumb rule should be, 'if you liquidate all your assets the net value of it should be more than all your liabilities'."**

What should be the next consideration to invest in real estate now? **Securing the right debt.** Remember real estate investment comes with the risk of interest rates that could change with flip-flops in the economy. Interest rates caps or fixed interest rates hence may be a better option than floating rates that could unpredictably influence your 'cost of ownership' of the property and hence reduce the return on investments from it. While it is often advised that investment in real estate should not be seen in the short-term, it would be prudent to insulate yourself from short-term shocks that would blunt your investment in real estate.

Right now, it seems like 2023-24 is a **balanced year** for investing in real-estate as the cost of acquisition has not yet spiralled and promotors continue to offer sops for buying NOW as there is still a lot of left-over stock from the covid years. There **is no prediction of an imminent bubble-burst** in the real estate sector and the average **rent rates have been increasing consistently.**

**Rural land purchase** is also seeing a flurry in activity with a lot more interest from urban residents wanting to invest in out-back farm houses; a result of the comforting work-from-home culture they discovered during the lock-down days. Senior citizens too are wanting to enjoy the bounty of nature in their elder years – a sort-off 'back to the roots' – situation that is driving this demand and improved value of farm lands by almost 100 percent in the last three years.

The threat for investing in real estate though can again be a farmer like situation; with the cost of tomatoes spiralling to unprecedented levels, farmers wanting to gain from the bounty in price will start deploying a lot of farm land for tomatoes cultivation. However, by the time the crop is out, there is likely to be a bounty of produce in the market with the resultant effect of the prices dropping to levels that it becomes unviable for farmers to cultivate tomatoes.

**"The Nub"** – Look at real estate from the long term, don't be influenced by short-term impact of your investments, don't deploy so much that you risk a negative cash flow situation, **invest in favourable markets like the Tier 2 cities where the markets are not likely to hit extremes**, get creative with your source of funding, be aware of the long term impact so that you may maximise your returns when the necessity to sell arises.

## Sreevatsa Services

Visit us at **www.sreevatsa.com** to utilize various services that we offer apart from just selling homes to you. The gamut of services we offer comprise rental services for investors, resale of homes you want to offload, services management that include Repair, Maintenance and Refurbishment of your Property and Property Management Services that include turn-key post-sale management of your property comprising periodic housekeeping, rental and warehousing options for safekeep of household furniture and goods.

### UNIFIED SOLUTIONS FOR YOUR EVERY REAL ESTATE NEED

- Sale/Resale of Property
- Rental Service
- Building Maintenance Services
- Property Management
- Real Estate Referral


## An investment as worthy as Gold

SREEVATSA REALTY

# SREEVATSA LIANCA

Race Course, Coimbatore

### A premium apartment at Coimbatore's premium location built by the city's most reputed builder

READY TO OCCUPY

Here is an investment as good as gold with a value that will appreciate forever.

Presenting Sreevatsa Lianca, an uber-luxury apartment in Coimbatore city's thickest green district and its most-arrived living destination – Race Course. Sreevatsa Lianca comes packaged with premium styling and extra premium comforts that match the best of premium homes in the city.

**Amenities**
- Best of aesthetics
- Design that embraces absolute livability
- Premium conveniences to match your lifestyle
- Iconic, intriguing and truly inspired by you
- Health inspiring green cover




RERA No.: TN/11/BUILDING/0134/2017

SREEVATSA REALTY

To know more call us at:

**Sreevatsa Real Estates Pvt Ltd**

New no. 324, Mettupalayam Road, Coimbatore - 641 043, Tamil Nadu, INDIA | Email: realestate@sreevatsa.com

**94431 64850 | 94430 21915 | 94433 41901 | 94430 21990 | 0422 2432184**

BUILDING ON THE FOUNDATION OF YOUR TRUST

www.sreevatsa.com

Member CREDAI Intertek